**Source:** Tamil Murasu, Page 4
**Date:** 14 September 2023

# கேட்கும் திறனைச் சோதிக்கும் நடமாடும் மருந்தகங்கள்

குடியிருப்பாளர்கள் கேட்கும் திறன் தொடர்பான சுகாதாரச் சேவைகளை மேலும் எளிதில் பெறலாம்.

தேசியப் பல்கலைக்கழக மருத்துவமனையின் சமூக கேட்கும் திறன் ஆய்வுச் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டது அதற்குக் காரணம்.

ஜூரோங் மருத்துவ நிலையத்தில் புதிய கேட்கும் திறன் மருந்தகம் திறக்கப்பட்டுள்ளது. அத்துடன் புக்கிட் பாத்தோக், சுவா சூ காங், குவீன்ஸ்டவுன் ஆகிய மூன்று பலதுறை மருந்தகங்களில் அத்தகைய நடமாடும் மருந்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கேட்கும் திறன் தொடர்பில் அடிப்படை, விரிவான மதிப்பீடுகள், கேட்கும் திறன் கருவிகளை மதிப்பாய்வு செய்தல், பொருத்தும் சேவைகள், மறுவாழ்வுச் சேவைகள் உள்ளிட்டவை அந்த மருந்தகங்களில் வழங்கப்படுகின்றன.

Source: Tamil Murasu © SPH Media Ltd.
Permission required for reproduction